**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

**முன்னிலை – திரு.R.வெங்கடேஷ் பிரசாந்த், B.A.,B.L.(Hons), மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**

**2056, திருவள்ளுவர் ஆண்டு, விசுவாவசு வருடம், மாசி மாதம் 29–ம் தேதி**

**2026– ம் ஆண்டு மார்ச் மாதம் 13–ம் நாள் வெள்ளிக்கிழமை**

**IA No.9/2025**
**in**
**OS no.48/2021**

**–––**

அய்யாவு ....மனுதாரர்/வாதி

**/எதிர்/**

1.வட்டாட்சியர், திருப்புவனம்.
2.மாவட்ட ஆட்சியர், சிவகங்கை .....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
(Amended as per order in IA No.6/2023 dated on 25.09.2023)

இம்மனு என் முன்பாக 12.03.2026–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருR.ஸ்ரீதர் அவர்கள் ஆஜராகியும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.S,சுப்பராயன் அவர்கள் ஆஜராகியும் ஆவணங்கள் பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

தாவாச் சொத்தை நேரில் பார்வையிட்டும், அதன் இயற்கை அமைப்பை நோட் செய்தும், புகைப்படத்துடன் கூடிய ஆவணங்கள் சகிதம் அறிக்கை தாக்கல் செய்ய ஏதுவாக நீதிமன்றம் மூலம் ஆணையாளர் நியமனம் செய்து உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 9ன் கீழ் மனுதாரர்/வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்/வாதி தரப்பு மனுவின் சுருக்கம்:**

தாவா சொத்தின் புலஎண்.378/5 என்றும், அதன் மொத்த விஸ்தீரணம் 0.00.20 பரப்பு கொண்ட கிராம நத்தம் என்றும், இது அரசாங்கத்தில் மனுதாரரின் தாய் ராக்கு என்பவருக்கு நத்தம் நிலவரி பட்டா அசைன்மெண்ட் கொடுக்கப்பட்டதாகவும், மேலும், மேற்படி புலஎண்.378/5 யை சட்ட காலத்திற்கு மேலாக திட்டத்தின் கீழ் நீடனுபோக அனுபவத்தில் ராக்கு மற்றும் மனுதாரரின் குடும்பத்தார்கள் அனுபவித்து

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.13 15:50:50 +0530

வருகிறதாகவும், இந்நிலையில், தாவா புல எண்களுடன் சேர்த்து பக்கத்தில் உள்ள புலஎண். 378/1யும் சட்ட காலத்திற்கு மேலாக மனுதாரரும், அவரது குடும்பத்தினரும் புலஎண். 378/5 உடன் சேர்ந்தமையாக நீடனுபோக அனுபவத்தின் அடிப்படையில் அனுபவித்து வருகிறதாகவும், புலஎண். 378/1ல் மனுதாரரும் தட்டி மற்றும் ஆஸ்பெட்டாஸ் போட்டு சட்ட காலத்திற்கு மேலாக அனுபவம் செய்து வருகிறதாகவும், மனுதாரர் தாவாச் சொத்தை குடும்பத்தினருடன் சட்ட காலத்திற்கு மேலாக அனுபவம் செய்து அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வரி வகையறாக்களை முறையாக செலுத்தி தாவா இடத்தில் வீடு கட்டியும், அனைவரும் அறியும் வகையில் அனுபவம் செய்து வருகிறதாகவும், இந்நிலையில், ஊரில் உள்ள மூன்றாம் நபர் தூண்டுதலின் பேரில் அரசாங்கம் மனுதாரரின் தாவாச் சொத்துடன் சேர்த்து சட்ட காலத்திற்கு மேலாக அனுபவம் செய்து வரும் புலஎண். 378/1ல் தட்டி மற்றும் ஆஸ்பெட்டாஸ் போட்டு மனுதாரர் சட்ட காலத்திற்கு மேலாக அனுபவம் செய்து வருவதை தடுக்கும் வகையில் முயற்சி செய்கிறதாகவும், மேற்கண்டவாறு மனுதாரரும், அவரது தந்தையாரை தொடர்ந்து சட்ட காலத்திற்கு மேல் தாவா சொத்தினை ஆண்டு அனுபவம் செய்து வருவதாலும், எதிரிடை அனுபவமும் சித்தித்துள்ளது என்றும், இந்நிலையில், மூன்றாம் நபர் மனுதாரரை அணுகி தாவா சொத்திற்குள் கட்டிடம் கட்ட இடத்தை கிரையத்திற்கு கேட்டதில், மனுதாரர் அதற்கு மறுத்துவிட்டதாகவும், எனவே மனுதாரர் மீது வீண் விரோதம் கொண்டு, மனுதாரருக்கு தொந்தரவுகள் செய்ய வேண்டும் என்ற கெட்ட உள்நோக்கத்தோடுமூன்றாம் நபர் துணையோடு இந்த வாதி சட்டப்பூர்வமான அனுபவத்தை தடையும், இடைஞ்சலும் செய்யப் போவதாக கடந்த 24.08.2021ம் தேதி முதல் ஊருக்குள் கடுமையாக பிரஸ்தாபம் செய்து வருவதோடு, அதற்கான முயற்சிலும் கடுமையாக ஈடுபட்டு வருகிறதாகவும், அதற்கு அனுசரணையாக வருவாய்துறை அதிகாரிகளின் 16.08.2021ந் தேதி அறிவிப்பு அனுப்பி தட்டி மற்றும் ஆஸ்பெட்டாஸ்களை அப்புறப்படுத்தி சட்ட காலத்திற்கு மேலாக ஆஸ்பெட்டாஸ் அமைத்து அதில் உள்ளே ஆழ்துளை கிணறு போர் போட்டும் அனுபவம் செய்து வருகிறதாகவும், எனவே தாவா சொத்தை நேரில் பார்வையிட்டும், அதன் இயற்கை அமைப்பை நோட் செய்தும், புகைப்படத்துடன் கூடிய ஆவணங்கள் சகிதம் அறிக்கை தாக்கல் செய்ய ஏதுவாக சமூகம் நீதிமன்றம் மூலம்ஆணையாளர் நியமனம் செய்ய வேண்டிமனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.13 15:50:56 +0530

**<u>2) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு எதிருரையின் சுருக்கம்:–</u>**

மனுதார் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனு மற்றும் அபிடவிட்டில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் சட்டத்திற்கு புறம்பானது என்றும், அபிடவிட்டு பாரா 2ல் கூறியுள்ள தாவா சொத்தின் புலஎண் : 378/5ல் 0.00.20 பரப்பளவு கொண்ட கிராம நத்தம் என்றும், மேற்படி புலஎண் மனுதாரரின் தாய் ராக்கு என்பவருக்கு நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் அசைன்மெண்ட் பட்டா கொடுக்கப்பட்டது என்பது மட்டும் ஒப்புக்கொள்ளப்படுகிறது என்றும், மேற்படி புல எண்ணுடன் புலஎண் : 378/1ல் தட்டி மற்றும் ஆஸ்பட்டாஸ் போட்டு சட்டகாலத்திற்கு மேலாக அனுபவம் செய்து வந்ததாக கூறியிருப்பது ஒப்புக்கொள்ளப்படவில்லை என்றும், தாவா வழக்கிடை சொத்து அரசுக்கு பாத்தியப்பட்ட சொத்தாகவே இருந்து வருகிறதாகவும், புலஎண் 378/1ல் மனுதார் ஆக்கிரமிப்பு செய்து இருந்து வருவதால் 3ம் எதிர்மனுதாரின் அலுவலகத்திலிருந்து ந.க.அ1/2514/2021 என்ற எண்ணில் திருப்புவனம் வருவாய் ஆய்வாளரின் 30.01.2020ம் தேதிய அறிக்கையின் படி இந்த மனுதார் ஆக்கிரமிப்பாளராக இருந்து வருவதாகவும் அறிவிப்பு கிடைத்த 15 தினங்களுக்குள் ஆக்கிரமிப்பினை அகற்றிக் கொள்ள வேண்டும் என்றும் தமிழ்நாடு ஆக்கிரமிப்பு விதி 1905ன் படி ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்து 16.08.2021ம் தேதியில் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டுள்ளதாகவும், அந்த அறிவிப்பு சார்பு செய்யப்பட்ட பின் சட்டத்திற்கு புறம்பான முறையில் ஆக்கிரமிப்பு என்பதை காலி செய்வதை காலம் கடத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் இந்த கமிஷனர் மனுவும் தாக்கல் செய்யப்பட்டதாக தெரிய வருகிறதாகவும், வழக்கும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் மட்டுமே கேட்கப் பட்டுள்ளதாகவும், விளம்புகை பரிகாரம் மனுதார் தரப்பில் கேட்கப்படவில்லை என்றும், மனுதார் அனுபவம் செய்வதை பொறுத்து ஆணையாளர் மனுவும் தாக்கல் செய்திருப்பது சட்டப்படி செல்லக்கூடியது இல்லை என்றும், எனவே, இந்த 3ம் எதிர்மனுதாரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா என்பதே ஆகும்?

5) இருபுறமும் கேட்கப்பட்டது, ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6) மனுதாரர் அசல் வழக்கின் வாதி ஆவார். மனுதாரர் இந்த நிர் மனுவை அரசு

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.13 15:51:01 +0530

தரப்பினர்களான 1, 2 எதிர்மனுதாராக்ளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். ஆதியில் தாவா அசல் வழக்கை இந்த எதிர்மனுதாரர்கள் உட்பட மேலும் 2 தனி நபர்களை 1, 2 பிரதிவாதிகளாகவும், இந்த எதிர்மனுதாரர்களை 3, 4 பிரதிவாதிகளாக கண்டு வழக்கு தாக்கல் செய்து பின்னீடு மேற்படி அசல் வழக்கில் ஆதியில் கண்ட 1, 2 பிரதிவாதிகளை நீக்கறவு செய்தும், இந்த எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மட்டும் வழக்கு நிலுவையில் இருந்து வந்த நிலையில் இந்த நிர் மனு ஆணையர் நியமிக்க கோரி மனுதாரர்/வாதியால் அரசு தரப்பினர்களான 1, 2 எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில் 1ம் எதிர்மனுதாரருக்கு பதிலாக 3ம் எதிர்மனுதாரர் என தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது.

7) தாவா மனு அபிடவிட்டில் 2வது பாராவில் தாவா சொத்தின் புல எண்.378/5 என்றும் அதன் மொத்த விஸ்தீரணம் 0.00.20 பரப்பு கொண்ட கிராம நத்தம் ஆகும் என்றும் மேற்படி புல எண்ணில் கண்ட சொத்தும் இந்த நம்பர் மனுதாரரின் தாயார் ராக்கு என்பவருக்கும் நத்தம் நிலவரி திட்டத்தின் கீழ் அசைன்மெண்ட் பட்டா கொடுக்கப்பட்டதாகவும், மேலும் மேற்படி புல எண்.375/5 ஐ சட்டக்காலத்திற்கு மேலாக நீடானுபோக அனுபவத்தில் ராக்கு மற்றும் அவர்களது குடும்பத்தார்கள் அனுபவித்து வருவதாகவும், தாவா புல எண்களுடன் சேர்த்து பக்கத்தில் உள்ள புல எண்.378/1 யையும் சட்டக்காலத்திற்கு மேலாக மனுதாரர்களும் அவர்களது குடும்பத்தினரும் புல எண்.378/5 உடன் சேர்ந்தமயாக நீடனுபோக அனுபவத்தின் அடிப்படையில் அனுபவித்து வருகிறதாகவும், மேற்படி புல எண்.378/1ல் மனுதாரரும், தட்டி மற்றும் ஆஸ்பெட்டாஸ் போட்டு சட்டக்காலத்திற்கு மேலாக அனுபவம் செய்து வருவதாகவும், தாவா இடத்தில் முறையாக வீடு கட்டியும் வரிவகையறாக்கள் செலுத்தியும் அனுபவம் செய்து வருவதாகவும் இந்நிலையில் மேற்படி தட்டி மற்றும் ஆஸ்பெட்டாஸ் போட்டுள்ள புல எண்.378/1ல் மனுதாரர் சட்டக்காலத்திற்கு மேலாக அனுபவம் செய்து வருவதை தடுக்கும் வகையில் முயற்சி செய்கிறதாகவும், சட்டக்காலத்திற்கு மேலாக மனுதாரரும் அவரது தந்தையாரும் தாவா சொத்தினை ஆண்டு அனுபவம் செய்து வருவதாலும், எதிரிடை அனுபவம் சித்தித்துள்ளதாகவும், இந்நிலையில் கெட்ட உள்நோக்கத்தோடு 3ம் நபர் துணையோடு மனுதாரரின் சட்டப்பூர்வமான அனுபவத்தை தடையும், இடைஞ்சலும் செய்யப்போவதாக பிரஸ்தாபித்து வருவதோடு அதற்கான முயற்சியிலும் கடுமையாக ஈடுபட்டு

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.13 15:51:09 +0530

வருகின்றனர் என்று சொல்லியுள்ள நிலையில், யார் அவ்வாறு பிரஸ்தாபம் செய்து வருகிறார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை ஏதோ அவ்வாறு பிரஸ்தாபம் செய்து வருபவர்களுக்கு அனுசரணையாக வருவாய்த்துறை அதிகாரிகள் 16.08.2021ம் தேதி அறிவிப்பு அனுப்பி தட்டி மற்றும் ஆஸ்பெட்டாஸ்களை அகற்றி கொள்ள அறிவிப்பு வருவாய்துறை அதிகாரிகள் மூலம் கொடுக்கப்பட்டதாகவும், மேற்படி நம்பர் மனுதாரரும் சட்டக்காலத்திற்கு மேலாக ஆஸ்பெட்டாஸ் அமைத்து அதில் உள்ளே ஆழ்துளை கிணறு போட்டும் அனுபவம் செய்து வருவதாகவும், எனவே ஆணையர் நியமனம் செய்து தாவா சொத்தை நேரில் பார்வையிட்டு அதன் இயற்கை அமைப்பு குறித்து புகைப்படத்துடன் கூடிய ஆவணங்கள் சகிதம் அறிக்கை தாக்கல் செய்ய ஏதுவாக சமூகம் நீதிமன்றம் மூலம் ஆணையர் நியமனம் செய்ய வேண்டியது அவசியமாய் உள்ளது என்று மனுதாரர் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

8) மாறாக, 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மறுப்புரையில் மனுதாரரின் தாயாருக்கு புல எண்.378/5ல் அசைண்மெண்ட் பட்டா மட்டும் கொடுப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டதாகவும், புல எண்.378/1ல் தட்டி மற்றும் ஆஸ்பெட்டாஸ் போட்டு சட்டக்காலத்திற்கு மேலாக அனுபவம் செய்து வந்ததாக கூறியிருப்பது ஒப்புக்கொள்ளப்படவில்லை என்றும், தாவா வழக்கிடை சொத்து அரசுக்கு பாத்தியப்பட்ட சொத்தாகவே இருந்து வருவதாகவும், புல எண்.378/1ல் மனுதாரர் ஆக்கிரமிப்பு செய்து இருந்து வருவதால் இந்த எதிர்மனுதாரர் அலுவலகத்திலிருந்து ந.க.அ.1/2514/2021 என்ற எண்ணில் திருப்புவனம் வருவாய் ஆய்வாளரின் 30.01.2020ம் தேதிய அறிக்கையின் படி இந்த மனுதாரர் ஆக்கிரமிப்பாளராக இருந்து வருவதாகவும், அறிவிப்பு கிடைத்த 15 தினங்களுக்குள் ஆக்கிரமிப்பினை அகற்றிக்கொள்ள வேண்டும் என்றும் தமிழ்நாடு ஆக்கிரமிப்பு விதி 1905ன் படி ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று 16.08.2021ம் தேதியில் அறிவிப்பு சார்வு செய்யப்பட்டதாகவும், மேற்படி அறிவிப்பு கிடைத்தவுடன் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை காலி செய்வதிலிருந்து காலம் கடத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் இந்த கமிஷ்னர் மனு தாக்கல் செய்யப்பட்டதாக தெரிய வருவதாகவும், மனுதாரர் நிரந்தர உறுத்துக்கட்டளை மட்டும் கோரியுள்ள நிலையில் அனுபவம் செய்வதை பொறுத்து ஆணையாளர் மனுவும் தாக்கல் செய்திருப்பது சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்றும் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டி எதிர்மனுதாரர்கள் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.13 15:51:17 +0530

9) மனுதாரர் தாவா மனுவில் எதற்காக ஆணையர் நியமிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டு கூறவில்லை. மனுதாரரே அவரது மனு அபிடவிட்டில் புல எண்.378/5க்கு தான் தனது தாயார் பெயரில் அசைன்மெண்ட் வழங்கப்பட்டது என்பதையும் மேற்படி அசைன்மெண்ட் சொத்திற்கு அருகாமையில் உள்ள புல எண்.378/1ல் தான் தட்டி மற்றும் ஆஸ்பெட்டாஸ் போட்டு சட்டக்காலத்திற்கு மேலாக அனுபவம் செய்து வருவதாகவும் சொல்லியுள்ள நிலையில், மேற்படி புல எண்.378/1 ஆனது மனுதாரருக்கு பாத்தியப்பட்டது அல்ல என்பது நிரூபணமாகிறது. மேலும் மனுதாரர் தனது மனு அபிடவிட்டில் சட்டக்காலத்திற்கு மேலாக அனுபவம் செய்து அரசாங்கத்திற்கு வரி வகையறாக்களை செலுத்தி வந்ததாக சொல்லியுள்ள நிலையில், மேற்படி வரி வகையறாவானது புல எண்.378/5க்கு செலுத்தப்பட்டதா அல்லது புல எண்.378/1க்கு செலுத்தப்பட்டதா என்பது குறித்து தெளிவாக குறிப்பிடவில்லை. புல எண்.378/1ல் எந்த உரிமையின் அடிப்படையில் தட்டி மற்றும் ஆஸ்பெட்டாஸ் போட்டு அனுபவித்து வருகிறார் என்பது குறித்தும் மனு அபிடவிட்டில் தெரிவிக்கவில்லை. மனுதாரர் தனது வாதுரையின் போது ஆக்கிரமிப்புகளை அறிய ஆணையர் நியமனம் தேவை என்று சொல்லியுள்ள நிலையில், தாவா புல எண்ணாக வழக்கில் காட்டியுள்ள புல எண்.378/1 அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்ற நிலையில் யாருடைய ஆக்கிரமிப்பை அறிய இந்த ஆணையர் நியமன மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதே கேள்விக்குறியாக உள்ளது. மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றும், ஆணையர் நியமிக்க உரிய காரணங்கள் தெரிவிக்காத காரணத்தினால் மனுதாரரின் மனு நிலைக்கக்கூடியதல்ல என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10) **முடிவாக**, மனுதாரரின் மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026–ம் வருடம் மார்ச் மாதம் 13–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.13 15:51:23 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

| |
|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:இல்லை |

| |
|---|
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:இல்லை |

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.13 15:51:31 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை
நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்
IA No.9/2025 in OS no.48/2021
உத்தரவு
நாள்:13.03.2026